**குளியாப்பிட்டிய பிரதேச சபை**
**குருனாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஜுன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 22 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குளியாப்பிட்டிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடுகளில் ஏற்படுகின்ற வேறுபாடுகள் அதனுடன் தொடர்பான வருமானங்கள் / செலவுகளின் நடப்பாண்டின் வேறுபாடுகளாக இனங்காணப்பட வேண்டிய போதும் முன்னைய வருடத்தின் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 827,499 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 32,834,885 கூடுதலாக மதிப்பிடப்பட்டமையின் காரணமாக முன்னைய வருடத்தின் வேறுபாடாக இனங்காணப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு வேறுபாடுகள் நடப்பாண்டின் வருமான செலவினங்களுடன் தொடர்புபடுத்தி பார்க்கப்படல் வேண்டும். | முன்னைய ஆண்டுகளின் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சீராக்கம் செய்யப்பட்ட வகையில் 2019 ஆம் ஆண்டிலும் முன்னைய வருடத்திற்கான சீர் செய்தல் திரண்ட நிதியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டு கணக்குகள் தயாரிக்கையில் நடப்பாண்டிற்கு சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிலும் அபிவிருத்தி செய்யப்பட்ட 06 கட்டிடங்களின் ரூபா. 4,909,127 தொகையான இறுதிப் பெறுமதி | நிர்மாண வேலைகள் முடிவடைந்ததும் சொத்துக்களை மூலதனமாக்குவ | ஏற்றுக்கொள்கிறேன். 2020ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | தற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | |
| (இ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத்தொகை ரூபா. 1,583,176 பெறுமதியான பல்வேறு சொத்துக்கள் விடயங்களுடன் தொடர்பான 328 பொருட்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்குரிய செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பபேன். |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான தொகை மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ஏலத்தில் விடப்பட்ட 44 பொருட்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | ஏலத்தில் விடுவதற்காக இனங் காணப்பட்ட பொருட்களின் பெறுமதி கணக்கு களிலிருந்து நீக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பபேன். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட 1,107 வெற்றுத் தார் பீப்பாக்களின் தேறிய பெறுமதியாகிய ரூபா. 110,700 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தொகை கணக்கிடப்படல் வேண்டும். | தகவல்கள் கிடைக்காததன் காரணமாக கணக்கிடப்படாத அதேவேளை 2020ஆம் ஆண்டு நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஊ) | பிரதேச சபை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த கரப்பந்து விளையாட்டரங்கின் முடிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதியாகிய ரூபா. 1,555,008 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன்.<br>2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பபேன். |
| (எ) | பிரதேச சபை வளாகத்தில் சிற்றுண்டிச்சாலையின் முடிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா. 2,160,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் சரியாக கணக்கிடப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன்.<br>2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பபேன். |
| (ஏ) | காணி ஏல விற்பனைகள் மூலம் சபைக்கு கிடைத்திருந்த 01 | சகல சொத்துக்களும் | இக்காணிகளுக்குரிய உறுதிகள் கிடைக்காமல் |

| | | | |
|---|---|---|---|
| | ஏக்கர் மற்றும் 27.72 பேர்சஸ் விசாலமான 04 காணித் துண்டுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகளுக்கு சீராக்க வேண்டும். | இருந்ததுடன் 2002 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (ஐ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 05 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் பயன்பாட்டு புத்தகங்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 37,504,441 ஆன வேறுபாடொன்று இருந்தது. | குறித்த மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பீடு செய்யப்பட்டு சீராக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | **<u>இயந்திரம் மற்றும் உபகரணம்</u>**<br><br>அட்டவணை மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கிடையில் ரூபா. 829,798.28 வேறுபாடு காணப்பட்டது.<br>**மோட்டார் வாகனம் மற்றும் இழுவண்டிகள்**<br><br>பல வருடங்களாக காணப்பட்டு வருகின்ற வேறுபாடாகும்.<br><br>**<u>தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்</u>**<br>2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.<br><br>**<u>நானாவித கடன்கொடுத்தோர்</u>**<br><br>கடன்கொடுத்தோர் அட்டவணை மற்றும் நிதிக்கூற்றுக்களின் பெறுமதி களுக்கிடையிலான வேறுபாட்டினை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஓ) | பெறுமதி ரூபா. 401,367,671 ஆக இருந்த 07 கணக்குகளுடன் தொடர்பான விபரங்கள் அடங்கிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விபரங்கள் அடங்கிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது விபரங்கள் அடங்கிய அட்டவணைகளைப் பெற்று சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

1.4 **இணங்காமைகள்**

1.4.1 **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | மாகாண அமைச்சரவைத் தீர்மானங்கள் | | | | |
| | 2014 ஏப்ரல் 01 ஆம் திகதிய வடமேல் மாகாண அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மான இல.6/1அமை/2014/37 | 130,689 | தலைவர் மற்றும் உப தலைவருக்காக 2019 ஆம் ஆண்டு ரூபா. 36,000 மற்றும் ரூபா. 72,000 தொடர்பாடல் கொடுப்பனவாகவும் தொலைபேசி பட்டியல் கட்டணமாக முறையே ரூபா. 35,915 மற்றும் ரூபா. 22,774 செலுத்தப்பட்டிருந்தது. | தொடர்பாடல் கொடுப்பனவு வழங்கப்படுவது தொலைபேசி மற்றும் இணையத்தள வசதிகளுக்காக என்பதனால் ஒரே செலவுக்காக கொடுப்பனவு மற்றும் மீளளிக்கப்படாததன் காரணமாக உள்ளூராட்சி ஆணையாளரிடம் விசாரித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். | வடமேல் மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் தொடர்பாடல் கொடுப்பனவாக ரூபா. 3,000 வழங்குவதற்காக வழங்கியிருந்த அனுமதியின் அடிப்படையில் தலைவர்/உப தலைவருக்காக 2019 ஆம் ஆண்டு ரூபா. 72,000 தொடர்பாடல் கொடுப்பனவு வழங்கப்பட்டது. இது அனைத்து உறுப்பினர்களுக்கும் உரித்துடையது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 2008 ஆம் ஆண்டிலிருந்து உள்ளூராட்சி சபையின் தலைவர் மற்றும் உப தலைவருக்காக ரூபா. 3,000 மற்றும் ரூபா. 4,500 உயர்ந்த கொடுப்பனவிற்கு உட்பட்டு தொலைபேசி கொடுப்பனவு உரித்து உடையதாகியுள்ளது. அது இரத்துச் செய்யப்படுவதாக மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குறிப்பிட்படாததுடன் இதுவரையில் அக் கொடுப்பனவு தலைவர்/உப தலைவருக்காக நீண்ட காலமாக செலுத்தப்பட்டு வந்துள்ளதன் காரணமாக அச் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா. 35,915 மற்றும் ரூபா. 22,774 செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடுவதுடன் இக் கொடுப்பனவுகள் அனைத்திற்கும் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>--------------------------------<br>2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க, சுற்றறிக்கை. | வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவு குறித்த காலத்தில் பரிசோதிக்கப்படல் வேண்டும். | எரிபொருள் சமப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்ற தினத்தில் அத்தியாவசிய தேவைக்காக வெளியில் சென்றிருந்ததன் காரணமாக எரிபொருள் சமப்படுத்தலை மேற்கொள்ள முடியவில்லை. மிக விரைவில் அதனை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு
------------------------

### 2.1 நிதி விளைவுகள்
------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,230,883 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,796,470 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,212,665 | 2,893,830 | 2,800,839 | 575,065 | 1,890,800 | 2,357,687 | 2,570,084 | 501,224 |
| (ii) | வாடகை | 7,103,400 | 9,475,836 | 9,449,207 | 3,503 | 6,451,260 | 8,287,310 | 8,238,179 | 75 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 717,000 | 1,236,478 | 1,236,478 | - | 619,000 | 843,541 | 843,541 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 204,492,000 | 177,607,740 | 214,564,157 | 147,859,442 | 158,190,200 | 174,447,606 | 147,922,921 | 185,057,236 |
| | மொத்தம் | 214,525,065 | 191,213,884 | 228,050,681 | 148,438,010 | 167,151,260 | 185,936,144 | 159,574,725 | 185,558,535 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

**(அ) வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 247,320 ஆகவிருந்த வீதவரி மீதியினுள் 03 வருடங்களுக்கும் மேலாக காணப்பட்டு வருகின்ற ரூபா. 71,600 மீதியும் அடங்கியிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடப்படுவதற் கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வீதவரி நிலுவையில் 2020 முதல் காலாண்டின் இறுதியில் ரூபா. 90,578 அறவிடப்பட்டிருந்தது. |

**(ஆ) ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 327,745 ஆகவிருந்த ஏக்கர் வரி மீதியினுள் 03 வருடங்களுக்கும் | பிரதேச சபைச் சட்டத்தின் விதிகளுக்கமைவ | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ஏக்கர் வரி நிலுவையில் 2020 முதல் |

| | | |
|---|---|---|
| மேலாக காணப்பட்டு வருகின்ற ரூபா. 301,052 மீதியும் அடங்கியிருந்தது. | ாக வருடத்திற்கான பட்டியலிடல் மற்றும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | காலாண்டின் இறுதியில் ரூபா. 9,411 அறவிடப்பட்டிருந்தது. |

### 2.2.3 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா. 13,902,623 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா. 121,748,054 ஆகவும் இருந்தது. பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தில் ரூபா. 35,821,969 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | பெற வேண்டிய நிதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா. 8,979,980 உம் நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா. 44,801,949 உம் 2020 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களில் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் மீதமுள்ள பெற வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப | பிறப்பிக்கப்பட்ட/ஏற்றுக்கொள்ளப்பட்ட உப விதிகளின் அடிப்படையில் செயற்படுவதற்கும், | குளியாப்பிட்டிய பிரதேச சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் 42 உப விடயங்கள் உள்ளடங்கும் வகையில் உப |

| | | |
|---|---|---|
| விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 டிசம்பர் 31 ஆம் திகதி 10 உப விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட உப விதிகளை பின்பற்றுவதன் மூலம் 42 உப விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. | சபையின் தேவைகளுக்கேற்ப உப விதிகளை பிறப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விதிகள் பின்பற்றப்பட்டுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக மேலும் 10 உப விடயங்கள் உள்ளடங்கும் வகையில் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டு பின்பற்றப்பட்டு செயற்படுத்தப்படுவதுடன் தற்பொழுது சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் உருவாகும் உக்கக்கூடிய கழிவுகளை அவை உற்பத்தியாகும் இடங்களிலேயே குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு உப விதி வரைவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான வரவு செலவு நிகழ்ச்சித் திட்டங்கள் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்தி இலக்குகள், அளவுகோல்கள் திட்ட வட்டமாக இனங்காணப்பட்டு முன்னேற்றம் அளவிடப்பட்டிருக்கவில்லை. | 17 அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்பான நோக்கங்கள் இனங்காணப்பட்டு அதனடிப்படையில் வரவு செலவு திட்டத்தினை தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் பொழுது நிகழ்ச்சித்திட்டங்கள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு வரிசைப்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 டிசம்பர் 31 ஆம் திகதி பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையில் ரூபா. 51,890,292 ஒரு வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு உட்பட்ட காலமும், ரூபா. 376,652 03 வருடங்களுக்கும் கூடுதலான காலமாகவும் அறவிடப்படாமலிருந்தது. | பெற வேண்டிய நிதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019.12.31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய தெகையில் மீதமுள்ள தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 டிசம்பர் 31 ஆம் திகதி செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையில் ரூபா. 2,539,765 ஒரு வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு உட்பட்ட காலமும், ரூபா. 1,188,611 03 வருடங்களுக்கும் கூடுதலான காலமாகவும் தீர்க்கப்படாமலிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூன்றாம் நிலை பதவிகளுடன் தொடர்பான ஒரு வெற்றிடமும், இரண்டாம் நிலை பதவிகளுடன் தொடர்பான 13 வெற்றிடங்களும், ஆரம்ப நிலை பதவிகளுடன் தொடர்பான 04 வெற்றிடங்களும் 01 மேலதிகமும் காணப்பட்டன. அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 24 ஆளணியினர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | தேவைப்பாடு ஆய்வின் அடிப்படையில் அத்தியாவசிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஆங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 146 மற்றும் தற்போது உள்ள ஆளணியினர் 156 என்பதை ஏற்றுக்கொள்கிறேன். மேலதிக ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதேச சபையின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அத்தியாவசிய சேவைகளுக்காக பொது சபை தீர்மானத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகார்திற்கிணங்க அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 24 ஆளணியினர் சேவையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இடமாற்றம், இறப்பு, சேவையிலிருந்து இடை விலகல் மற்றும் ஓய்வு பெறல் ஆகிய காரணங்களால் 24 உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா. 1,123,168 ஆகவிருந்தது. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அறவிடுவதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத மீதிகளை அறவிடுவதற்காக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |